[1980 பிப்ரவரி 11

7. அரசினர் தீர்மானம்.

விதி 31-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் ''வினாக்கள்—விடைகள்'' என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 31-ஐ நாளை 12—2—1980 அன்று தளர்த்தி அந்த நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றறு, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

61. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு (மாற்றியமைக்கப்பட்ட ஆட்சிப் பகுதி) ரயத்துவாரி செட்டில்மெண்டு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 4—10—1979 ஆம் தேதியிடப் பெற்ற 1602-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1964-ஆம் ஆண்டு (மாற்றியமைக்கப்பட்ட ஆட்சிப் பகுதி) ரயத்துவாரி செட்டில்மெண்டு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30 1964) 26 (2)-ஆம் பகுதியின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

62. கல்வித் துறையில் 16—2—1979-ஆம் தேதியன்று வெளியாகி, 28—2—1979-ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழ் வெளியீட்டில் பாகம் II பிரிவு 2-ல் 109-ஆம் பக்கத்தில் வெளியான (2)/ EDU /1345/79-ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 12—3—1979-ஆம் தேதியிடப்பெற்ற குறிப்பாணை எண். 13987/ RDI /79-3-ல் வெளியான அறிவிப்பு [1978-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2)-ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

1980 பிப்ரவரி 11]

63. உதகமண்டலத்திலுள்ள இந்திய-ஜெர்மன் நீலகிரி மேம்பாட்டுத் திட்டப் பணியின் புள்ளி விவர உதவியாளர் பதவியினை தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காக, தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர்–M) துறையின் 4—10—1979-ஆம் தேதியிடப்பெற்ற 1131-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

64. இணை விரிவுரையாளர், முதுநிலை விரிவுரையாளர், இளநிலை விரிவுரையாளர் என்று பெயர் மாற்றம் செய்யப்பெற்றுள்ள அச்சுத் தொழில் விரிவுரையாளர், உதவி விரிவுரையாளர் அச்சுத் தொழில் பயிற்சி ஆசிரியர், செய்முறை விளக்குனர் ஆகிய பதவிகளை தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் சேர்ப்பதற்காக, தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர்- M) துறையின் 11—12—1979-ஆம் தேதி யிடப்பெற்ற 1323-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

65. குன்னூரிலுள்ள இந்திய குடும்ப நலச் சங்கத்திற்குச் சொந்தமான MDN 8313, TNN 358-ஆம் எண்களுள்ள மோட்டார் வண்டிகளைப் பொறுத்த வரையில் செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 18—12—1979-ஆம் தேதியிடப்பெற்ற 3091-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.